0 APR 1996

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 1995 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, இலங்கை சமுர்த்தி அதிகாரசபைச் சட்டம்

(1995, திசெம்பர் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசின் ஆணைப்படி அச்சிடப்பட்டது

1995, திசெம்பர் மாதம் 15 ஆந் தேதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

ரூபா : 1.65

தபாற் செலவு : ரூபா 2.55

## 1995 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, இலங்கை சமுர்த்தி அதிகாரசபைச் சட்டம்

[1995, டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

எ. வ.—ஏ. 57/94

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையைத் தாபிப்பதற்கும் ; இளம் ஆட்கள், பெண்கள், குறைந்த அனுகூலம் வாய்ந்த வகுதியினர் ஆகியோரைப் பொருளாதார, சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளினுள் ஒன்றிணைக்கும் நோக்குடன் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் அதிகாரசபையினால் திட்டமிடப்படுவதற்காகவும் செயற்படுத்தப்படுவதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும் ; சமூக உறுதிப்பாட்டை மேம்படுத்துவதற்கும் வறுமையை ஒழிப்பதற்கும் அவற்றோடு தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, இலங்கை சமுர்த்தி அதிகாரசபைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக் கூடியவாறான அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்; (அது இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட திகதி" எனக் குறிப்பிடு செய்யப்படும்).

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

### பாகம் I

### இலங்கை சமுர்த்தி அதிகாரசபையைத் தாபித்தல்

2. (1) (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பிடு செய்யப்படும்) இலங்கை சமுர்த்தி அதிகாரசபை எனவழைக்கப்பட வேண்டிய அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்; அது 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையைத் தாபித்தல்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையும்கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பெயரைக்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் ; அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

3. (1) அதிகாரசபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

அதிகாரசபையின் பணிப்பாளர்கள்.

(அ) நான்கு பதவிவழிப் பணிப்பாளர்கள், அதாவது,

(i) (இதனகத்துப்பின்னர் "செயலாளர்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) கிராமிய அபிவிருத்தி என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(ii) நிதி என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் :

உ—டீ 036789 — 2,495 (95/09)

(iii) சமுர்த்தியின் ஆணையாளர் தலைமையதிபதி ;

(iv) வறியோர் நிவாரண ஆணையாளர்; அத்துடன்

(ஆ) அமைச்சரினால் நியமிக்கப்படும் ஏனைய மூன்று பணிப்பாளர்கள். (இப்பந்தியின்கீழ் நியமிக்கப்படும் பணிப்பாளரொருவர் இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட பணிப்பாளர்" எனக் குறிப்பிடு செய்யப்படுதல் வேண்டும்).

(2) அமைச்சரானவர், பணிப்பாளர்களுள் ஒருவரை அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியாகவிருக்கவென நியமித்தல் வேண்டும்; (அவர் இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்).

(3) இச்சட்டத்துக்கான அட்டவணையின் ஏற்பாடுகள், பணிப்பாளர்களின் பதவி நியதிகள், பணிப்பாளர்களுக்குச் செலுத்தப்படற்பாலதான வேதியம், அதிகாரசபையின் கூட்டங்கள், அத்துடன் அதிகாரசபையின் இலச்சினை என்பன தொடர்பாகப் பயனுடையனவாதல் வேண்டும்.

அதிகாரசபையின் பணிகள்.

4. அதிகாரசபையின் பணிகள், இளம் ஆட்கள், பெண்கள், குறைந்த அனுகூலம் வாய்ந்த வகுதியினர்கள் என்போரின் பொருளாதார, சமூக நிலைமைகளைப் பின்வருவனமூலம் நோக்குவதற்காக (இதனகத்துப் பின்னர் "நிகழ்ச்சித்திட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) சமுர்த்தி தேசிய நிகழ்ச்சித்திட்டமெனவழைக்கப்படும் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை வகுத்தமைத்தற்கானதாதல் வேண்டும் :—

(அ) வருமான அதிகரிப்பு மற்றும் தொழில் என்பவற்றுக்கு அவர்களின் வாய்ப்புக்களைப் பரந்தனவாக்குதல்;

(ஆ) பொருளாதார, சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளினுள் அவர்களை ஒன்றிணைத்தல் ;

(இ) கிராமிய, பெரும்பாக, மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் சமுதாய அபிவிருத்திக் கருத்திட்டங்களுடன் குடும்பமட்ட பொருளாதாரச் செயற்பாடுகளை இணைத்தல் :

(ஈ) அவர்களின் மேம்பாட்டுக்கான கருத்திட்டங்களையும் திட்டங்களையும் திட்டமிடுவதிலும், முகாமைசெய்வதிலும் அவர்களின் பங்குபற்றுகையைத் திரட்டுதல் ;

(உ) அவர்களிடையே ஒத்துழைப்பை வளர்த்தலும், அவர்களிடையே சேமிப்புகளை மேம்படுத்துதலும், கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு உதவுதலும் ;

(ஊ) நிகழ்ச்சித்திட்டத்தின் பயனாளிகளுக்கு அரசாங்கத் திணைக்களங்கள், பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள், உள்ளூரதிகாரசபைகள், தனியார்துறை ஒழுங்கமைப்புகள் மற்றும் அரசாங்கம் சாரா ஒழுங்கமைப்புகள் என்பவற்றின் உள்ளீடுகளையும் சேவைகளையும் ஒப்படைப்பதனை வசதிப்படுத்துதல்.

அத்துடன் அவ்வாறு வகுத்தமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தையும் வறுமை ஒழிப்புக்கான அரசாங்கத்தின் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களையும் சொற்படுத்துதல்.

5. நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தும் நோக்கத்துக்காக, அதிகாரசபை பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :— அதிகாரசபையின் தத்துவங்கள்.

(அ) மாவட்ட, பெரும்பாக மட்டங்களில் மாவட்ட, பெரும்பாக சமுர்த்திக் குழுக்களைத் தாபித்துப் பேணிவருதல்.

(ஆ) பயனுகரிகளுக்குக் கமத்தொழில், கடற்றொழில், கைத்தொழில் உள்ளீடுகளையும், தகவலையும் மற்றும் முகாமை, உசாத்துணைச் சேவைகளையும் ஏற்பாடு செய்வதற்காக கிராமியக் கொத்தணி மட்டத்திலும் கிராமிய மட்டத்திலும் சமுர்த்தி நிலையங்களையும் சமுர்த்தி செயலணிகளையும் தாபித்துப் பேணிவருதல் ;

(இ) நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துவதில் இளம் ஆட்களின் முனைப்பான பங்குபற்றுகையை உறுதிப்படுத்துவதற்குக் கிராமிய மட்டத்தில், மாவட்ட மட்டத்தில், பெரும்பாக மட்டத்திலும் மற்றும் தேசிய மட்டத்தில் இளம் ஆட்களைக் கொண்டுள்ள குழுக்களைத் தாபித்தல் ;

(ஈ) நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான பயனுகரிகளுக்கு சேமிப்புகள் மற்றும் கடன் திட்டங்களைத் தாபித்தலும், முகாமை செய்தலும் தொழிற்படுத்துதலும் ;

(உ) பயனுகரிக் குடும்பங்களின் உற்பத்திப் பொருட்களைக் களஞ்சியப் படுத்துவதற்காகவும், பதனிடுவதற்காகவும், விற்பனை செய்வதற்காகவும் (சந்தைப்படுத்தல் நிலையங்களை ஏற்பாடு செய்தலுட்பட) சந்தைப்படுத்தற் சேவைகளை ஏற்பாடு செய்தல் ;

(ஊ) சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாட்டுக்கான நிதிகளைத் திரட்டுவதற்கு தேசிய லொத்தர் சபையின் உதவியுடன் லொத்தர் விற்பனையை மேற்கொள்ளல்;

(எ) கிராமிய மட்டத்தில் அபிவிருத்திச் செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கும், முகாமை செய்வதற்கும் என நிகழ்ச்சித் திட்டத்தின் பயனுகரிகள் குழுக்களைத் தாபித்தல் ;

(ஏ) கமத்தொழில் உற்பத்தித்திறன், சுய தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி என்பனவற்றை மேம்படுத்தும் நோக்குடன், நிகழ்ச்சித்திட்டத்தின் பயனுகரிகளுக்கும் பயனுகரிக் குடும்பங்களுக்கும் பயிற்சி, முகாமை உசாத்துணை, மற்றும் தகவற் சேவைகளையும், கமத்தொழில், கடற்றொழில், கைத்தொழில் உள்ளீடுகளையும் ஏற்பாடு செய்தல் ;

(ஐ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளுதலும் வைத்திருத்தலும், அத்தகைய ஆதனத்தை விற்பனை செய்தலும், கைமாற்றுதலும், குத்தகைக்குக் கொடுத்தலும், ஈடுவைத்தலும் அல்லது வேறு வகையில் கையாளுதலும்.

(ஒ) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து காசாகவோ அல்லது பொருளாகவோ மானியக் கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெற்றுக் கொள்ளுதல் ;

(ஓ) ஒன்றில் நேரடியாகவோ அல்லது அதிகாரசபையினால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் அல்லது முகவர்கள் மூலமாகவோ, அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு

அல்லது அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்து கொள்ளுதலும் புரிதலும்.

## பாகம் II

### மாவட்ட சமுர்த்தி குழுக்கள், பெரும்பாக சமுர்த்தி குழுக்கள், சமுர்த்தி நிலையங்கள் மற்றும் சமுர்த்தி செயலணிகள்.

மாவட்ட சமுர்த்தி குழுக்கள்.

6. (1) நிர்வாக மாவட்டம் ஒவ்வொன்றிலும் (இதனகத்துப் பின்னர் "மாவட்டக் குழுக்கள்" எனக்குறிப்பிடு செய்யப்படும்) மாவட்ட சமுர்த்தி குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். இக்குழு அதன் தவிசாளராக அத்தகைய நிர்வாக மாவட்டத்திற்காக நியமிக்கப்பட்ட மாவட்டச் செயலாளரையும் அதிகாரசபையின் மூன்று இயைபான அலுவலர்களையும் மாவட்டச் செயலாளரால் ஆணையாளர் தலைமையதிபதியுடனும் அதிகாரசபையுடனுமான கலந்தாலோசனையுடன் நிர்மாணிக்கப்படக்கூடியவாறு அரசாங்கத் திணைக்களங்களினதும் ஒரு மாகாண பகிரங்கச் சேவையினதும் தனியார் துறை நிறுவனங்களினதும் அரசாங்கச் சார்பற்ற ஒழுங்கமைப்புகளினதும் அத்தகைய நிர்வாக மாவட்டத்தில் செயலாற்றுகின்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அல்லது அதில் வதியும் பயனுகரிகளின் அத்தகைய எண்ணிக்கையினரான பிரதிநிதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) மாவட்டக் குழுவானது, எந்த நிர்வாக மாவட்டத்திற்கென அத்தகைய மாவட்டக்குழு தாபிக்கப்பட்டுள்ளதோ அந்த நிர்வாக மாவட்டத்திற்குள் நிகழ்ச்சித்திட்டத்தையும் வேறு வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் எல்லா விடயங்களிலும் மதியுரை வழங்க வேண்டும் என்பதுடன் அத்தகைய குழுவானது ஆணையாளர் தலைமையதிபதியாலும் அதிகார சபையாலும் கோரப்படும்போது ஆணையாளர் தலைமையதிபதிக்கும் அதிகாரசபைக்கும் அறிக்கைகள் சமர்ப்பித்தலும் வேண்டும்.

பெரும்பாக சமுர்த்தி குழு

7. (1) பெரும்பாகச் செயலாளர் பிரிவு ஒவ்வொன்றிலும் சமுர்த்தி குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "பெரும்பாகக் குழு" எனக் குறிப்பிடு செய்யப்படும்). இக்குழுவானது அதன் தவிசாளராக அத்தகைய பெரும்பாகச் செயலாளர் பிரிவிற்கென நியமிக்கப்பட்ட பெரும்பாகச் செயலாளரையும் அதிகாரசபையின் மூன்று இயைபான அலுவலர்களையும், மாவட்டச் செயலாளரால் ஆணையாளர் தலைமையதிபதியுடனும் அதிகாரசபையுடனுமான கலந்தாலோசனையுடன் நிர்மாணிக்கப்படக்கூடியவாறு அரசாங்கத் திணைக்களங்களினதும் மாகாண பகிரங்கச் சேவையொன்றினதும் தனியார்துறைத் தாபனங்களினதும் அரசாங்க சார்பற்ற ஒழுங்கமைப்புகளினதும் அத்துடன் அத்தகைய நிர்வாக மாவட்டத்தில் செயலாற்றுகின்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அல்லது அதில் வதியும் பயனுகரிகளின் அத்தகைய எண்ணிக்கையினரான பிரதிநிதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பெரும்பாகக் குழுவானது, எந்தப் பெரும்பாகச் செயலாளர் பிரிவுக்கென அத்தகைய பெரும்பாகக் குழு தாபிக்கப்பட்டுள்ளதோ அந்தப் பெரும்பாகச் செயலாளர் பிரிவுக்குள் நிகழ்ச்சித் திட்டத்தையும் வேறு வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் எல்லா விடயங்களிலும் மதியுரை வழங்க வேண்டும் என்பதுடன் அத்தகைய குழுவானது, ஆணையாளர் தலைமையதிபதியாலும் அதிகார சபையாலும் கோரப்படும்போது ஆணையாளர் தலைமையதிபதிக்கும் அதிகார சபைக்கும் அறிக்கைகள் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. (1) பெரும்பாகச் செயலாளரால் நிர்மாணிக்கப்படக்கூடியவாறு கொத்தணியாக அமையும் கிராம சேவை அலுவலர் பிரிவுகளில், எந்தப் பிரிவுக்குள் அத்தகைய கிராம சேவை அலுவலர் பிரிவுகள் அமைந்துள்ளனவோ அந்தப் பிரிவுகளுக்கென அதிகார சபையுடனான கலந்தாலோசனையுடன் நியமிக்கப்பட்ட பெரும்பாகச் செயலாளரால் நிர்மாணிக்கப்படக்கூடியவாறு, வதிவுள்ளவர்களான நிகழ்ச்சித்திட்டம் பயனுகரிகளின் அத்தகைய எண்ணிக்கையினரான பிரதிநிதிகளைக் கொண்ட சமுர்த்தி நிலையமொன்று அத்தகைய கிராம சேவை அலுவலர்ப் பிரிவுகளின் கொத்தணியில் தாபிக்கப்படுதல் வேண்டும். சமுர்த்தி நிலையங்கள்.

(2) சமுர்த்தி நிலையத்தின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:—

(அ) அக்கொத்தணியிலுள்ள கிராம சேவை அலுவலர்ப் பிரிவுகளுக்கென தாபிக்கப்பட்ட சமுர்த்தி செயலணிகளின் செயற்பாடுகளைத் திட்டமிடுதலும் இணைப்புபடுத்தலும்.

(ஆ) வங்கிகளுடனும் கடன் வழங்கும் நிறுவனங்களுடனும் கூட்டிணைந்து கடன் மற்றும் வங்கித்தொழில் வசதிகளை ஏற்பாடு செய்தலும் அத்துடன் அந்தக் கொத்தணியிலுள்ள கிராமசேவை அலுவலர் பிரிவுகளுக்கெனத் தாபிக்கப்பட்ட சமுர்த்தி செயலணிகளின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான பயிற்சி முகாமைத்துவ மற்றும் வேறு ஆலோசனைச் சேவைகளை ஏற்பாடு செய்தலும் ;

(இ) நிகழ்ச்சித் திட்டத்தின் பயனுகரிகளின் சேமிப்புகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல் ;

(ஈ) கிராம சேவை அலுவலர் மட்டத்தில் உற்பத்தியாக்க வளங்களை மேம்படுத்தும் நோக்குடன் கிராமங்களின் அபிவிருத்திக்குத் தேவைப்படுத்தப்பட்ட உள்ளமைப்பு வசதிகளைத் திட்டமிடலும் ஏற்பாடு செய்தலும் ;

(உ) சமுர்த்தி செயலணி மட்டத்தில் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிப்பதற்கு அந்தக் கொத்தணி எந்தக் கிராம சேவை அலுவலரின் பிரிவுகள் எந்தப் பெரும்பாகச் செயலாளர் பிரிவிற்குள் அமைந்துள்ளதோ அந்தப் பெரும்பாகச் செயலாளர் பிரிவிற்கென தாபிக்கப்பட்ட பெரும்பாகக் குழுக்களுடனும் இணைபுறுதல்.

9. (1) கிராம சேவை அலுவலர் பிரிவு ஒவ்வொன்றுக்கும் சமுர்த்தி செயலணி ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். இது அத்தகைய கிராம சேவை அலுவலர் பிரிவில் வதியும் இளைஞர்கள் அனைவரையும் கொண்டிருத்தல் வேண்டும். சமுர்த்தி செயலணி

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் தாபிக்கப்படும் ஒவ்வொரு சமுர்த்தி செயலணிக்கும் நிறைவேற்றுப் பேரவை ஒன்றிருத்தல் வேண்டும். இப்பேரவையில் அத்தகைய செயலணியின் ஆண்டுப்பொதுக்கூட்டத்தில் சமுர்த்தி செயலணியின் பிரதிநிதிகளினால் தெரிந்தெடுக்கப்பட்ட ஏழு இளைஞர்களும் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களும் அத்தகைய பிரிவிலுள்ள அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் விளையாட்டுக்கள், இளைஞர் விவகார, கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அரசாங்கஞ் சாராத ஒழுங்கமைப்புகளிலிருந்து, எந்தப் பிரிவினுள் அத்தகைய கிராமசேவை அலுவலர் பிரிவு அமைந்துள்ளதோ அந்தப் பிரிவிற்கென நியமிக்கப்பட்ட பெரும்பாகச் செயலாளரினால் சமுர்த்தி ஆணையாளர் தலைமையதிபதியின் கலந்தாலோசனையுடன் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஐந்து பிரதிநிதிகளும் அடங்கியிருப்பர்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஒவ்வொரு சமுர்த்தி செயலணிக்கும் அத்தகைய சமுர்த்தி செயலணி அதன் பணிகளை நிறைவேற்றும்போது ஆலோசனையளித்து உதவியளிக்கும் நோக்கத்துக்காக, ஆலோசனைப் பேரவையொன்று நியமிக்கப்படுதல் வேண்டும். இப்பேரவையின், அத்தகைய சமுர்த்தி செயலணி எந்தக் கிராமசேவை அலுவலர் பிரிவுக்காகத் தாபிக்கப்பட்டதோ அத்தகைய பிரிவில் சமூக நலன்புரிச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள இளைஞர் அல்லாத ஏழு ஆட்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(4) சமுர்த்தி செயலணியின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) குடும்ப மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டத்தின் அபிவிருத்திக் கருத்திட்டங்களுடனும் அத்துடன் கிராம சேவை அலுவலர் பிரிவின் மட்டத்தில் அபிவிருத்திக் கருத்திட்டங்களுடனும் தொடர்புடைய எல்லா செயற்பாடுகளையும் செயற்படுத்துதலும் பேணி வளர்த்தலும் ;

(ஆ) வங்கிகளுடனும் கடன் வழங்கும் நிறுவனங்களுடனும் கூட்டிணைந்த கடன் மற்றும் வங்கித் தொழில் வசதிகளை ஏற்பாடு செய்தலும் அத்துடன் எந்த கிராம சேவை அலுவலரின் பிரிவிற்கென செயலணி தாபிக்கப்பட்டுள்ளதோ அந்தக் கிராம சேவை அலுவலர் பிரிவிலுள்ள நிகழ்ச்சித்திட்டத்தின் அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான பயிற்சி, முகாமைத்துவ, மற்றும் வேறு ஆலோசனைச் சேவைகளை ஏற்பாடு செய்தலும்;

(இ) நிகழ்ச்சித்திட்டத்தின் பயனுகரிகளின் சேமிப்புகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல்;

(ஈ) கருத்திட்டங்களின் அபிவிருத்தியைத் திட்டமிடுதலும் முகாமை செய்வதிலும் அத்தகைய கிராம சேவை அலுவலர் பிரிவில் வதிவுள்ள பயனுகரிகளின் சமூக முன்னேற்றம் பற்றிய செயற்பாடுகளிலும் அவர்களின் பங்கேற்பைத் தூண்டி விடுதல்;

(உ) எந்தப் பிரிவுக்குள் அத்தகைய கிராம சேவை அலுவலர் பிரிவு அமைந்துள்ளதோ அந்தப் பிரிவிற்கென நியமிக்கப்பட்ட பெரும்பாகக் குழுவால், நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் குறித்தொதுக்கப்பட்ட வேறு செயற்பாடுகளைப் பொறுப்பேற்றல்.

## பாகம் III

### சமுர்த்தியின் ஆணையாளர் தலைமையதிபதி

10. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக பெயர் குறித்து அல்லது பதவி குறித்து ஆணையாளர் தலைமையதிபதியொருவர் நியமிக்கப்படுதல் வேண்டும். ஆணையாளர் தலைமையதிபதியின் நியமனம்.

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான ஆணையாளர்களும் மாவட்ட ஆணையாளர்களும் பிரதி ஆணையாளர்களும் அத்துடன் துணை ஆணையாளர்களும் பெயர் குறித்து அல்லது பதவி குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) எந்நிருவாக மாவட்டம் தொடர்பானதாக மாவட்டச் செயலாளர் ஒருவருடைய நியமனம் இருக்கின்றதோ, அந்நிருவாக மாவட்டம் தொடர்பில் மாவட்டச் செயலாளர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தினால் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட அல்லது ஆணையாளர் தலைமையதிபதிமேல் சுமத்தப்பட்ட அல்லது அவருக்கு ஒதுக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம். ஒவ்வொரு பிரிவுச் செயலாளரும் அவருடைய நியமனம் எந்நிருவாகப் பிரிவுடன் தொடர்புடையதோ, அந்நிருவாகப் பிரிவு தொடர்பில், இச்சட்டத்தினால் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மேல் சுமத்தப்பட்ட அல்லது அவருக்கு ஒதுக்கப்பட்ட தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம்.

(4) இலங்கை முழுவதற்கும் அல்லது அதன் பகுதி எதற்கும் ஆணையாளர் அல்லது பிரதி ஆணையாளர் எவரும் நியமிக்கப்படலாம்.

11. ஐந்தாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, ஆணையாளர் தலைமையதிபதி, செயலாளரின் பணிப்புரைகள் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் அதிகாரசபைக்கும் இயையான அமைச்சுகள், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் வேறு நிறுவனங்களுக்கிடையில் ஒருங்கிணைப்பதன் மூலம் அரசாங்கத்தின் நிகழ்ச்சித் திட்டத்தையும் மற்றும் வேறு வறுமை நிகழ்ச்சித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு வசதி அளித்து உதவுதல் வேண்டும். நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் ஆணையாளர் தலைமையதிபதி உதவுதல்.

12. (1) ஆணையாளர், மாவட்ட ஆணையாளர், பிரதி ஆணையாளர் அத்துடன் துணை ஆணையாளர் ஒவ்வொருவரும், தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில், கடமைகளைப் புரிகையில் அல்லது தமது பணிகளை நிறைவேற்றுகையில், ஆணையாளர் தலைமையதிபதியின் பொதுவான பணிப்புரைக்கு அமைவாக இருத்தல் வேண்டும். அலுவலர்களின் தத்துவங்களும் கடமைகளும்.

(2) ஆணையாளர், மாவட்ட ஆணையாளர் அல்லது பிரதி ஆணையாளர் அல்லது உதவி ஆணையாளர் ஒவ்வொருவரும், ஆணையாளர் தலைமையதிபதியின் பொதுவான பணிப்புரைக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய அவரது நியமன இடப்பரப்புக்குள், இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆணையாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மேல் சுமத்தப்பட்ட அல்லது அவருக்கு ஒதுக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் எவற்றையும் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது உடம்பாரிக்கலாம்.

*தகவல் கொடுத்துதவுமாறு கோருவதற்கு ஆணையாளர் தலைமையதிபதிக்குள்ள தத்துவம்.*

13. ஆணையாளர் தலைமையதிபதி, எழுத்தில் அறிவித்தல் கொடுப்பதன் மூலம் அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள், இச்சட்டத்தின்கீழ் அவருக்குச் செய்யப்படும் ஏதேனும் வெளிப்படுத்துகையில் உள்ள ஏதேனும் கூற்றின் செம்மை பற்றி உறுதி செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய தகவலைத் தமக்குக் கொடுத்துதவுமாறு ஆளெவரையும் தேவைப்படுத்தலாம்.

## பாகம் IV

### அதிகாரசபையின் பணியாட்டொகுதி

அ. பி.

*அதிகார சபையின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல்.*

14. (1) அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலராகப் பணிப்பாளர் தலைமையதிபதியே இருத்தல் வேண்டும்.

(2) கொள்கையைப் பொறுத்த விடயங்களில், அதிகாரசபையின் பொதுவான பணிப்புரைக்கமைய, பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அதிகாரசபையின் தொழிலைக் கொண்டு நடாத்தும் பொறுப்பும அதன் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பும் அளிக்கப்படல் வேண்டும்.

(3) அதிகாரசபை, இச்சட்டத்தின் கீழ் திறமையாக அதன் பணிகள் நிறைவேற்றப்படுவதற்கு அதன் கடமைகள் புரியப்படுவதற்கு அவசியமென அது கருதும் அத்தகைய எண்ணிக்கையினரான அலுவலர்களையும், முகவர்களையும், சேவையாளர்களையும் நியமிப்பதற்கும், அவ்வாறு நியமிக்கப்படும் அலுவலர், முகவர் அல்லது சேவையாளர் எவர்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கவும் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கவும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்படும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது அலுவலர் எவருக்கும், அதன் தத்துவங்களில் எவற்றையும் அதிகாரசபை கையளிக்கலாம். அத்துடன் அத்தகைய தத்துவங்கள் எவ்வாளுக்குக் கையளிக்கப்படுகின்றதோ, அவ்வாள், அத்தத்துவங்களை, அதிகாரசபையின் பணிப்புக்கு அமையப் பிரயோகிக்கலாம்.

(5) மூன்றாம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்படும் அலுவலர்கள் சேவையாளர்கள் மற்றும் முகவர்கள் ஆகியோருக்கு, அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் அத்துடன் அத்தகைய நிபந்தனைகளுக்கு அமையவும் ஊதியம் அளிக்கப்படல் வேண்டும்.

(6) அதிகாரசபையின் வேண்டுகோளின் பேரில், பகிரங்க அலுவலர் எவரும், அவ்வலுவலரினதும், பொதுநிருவாக என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்

துடன், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம். அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(7) பகிரங்க அலுவலர் எவரும் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(8) பகிரங்க அலுவலர் எவரும் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(9) அதிகாரசபை, அரசாங்கத்தில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்குச் சேவைபுரிய உடன்பட்டிருக்கும் ஆளெவரையும் ஊழியத்தில் அமர்த்துகின்றவிடத்து, அதிகாரசபைக்கு அவ்வாளினால் புரியப்பட்ட சேவைக்காலப்பகுதி எதுவும், அத்தகைய உடன்படிக்கையின் கீழ் அவ்வாளின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அவ்வாளினால் அரசாங்கத்துக்குப் புரியப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் V

### நிதி

15. (1) அதிகாரசபை, (இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அதிகாரசபையின் நிதியம்.

(2) பின்வருவன, நிதியத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும் :—

(அ) அதிகார சபையின் உபயோகத்துக்கெனப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக் காலம் ஒதுக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகள்;

(ஆ) கொடைகளாகவும் நன்கொடைகளாகவும் ஏதேனும் மூலத்திலிருந்து அதிகாரசபையினால் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகள் ;

(இ) அதிகார சபையினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் அல்லது நிருவகிக்கப்படும் ஏதேனும் ஆதனத்திலிருந்து வருமானமாக அதிகாரசபையினால் பெறப்படும் எல்லாப் பணத்தொகைகள்; அத்துடன் ;

(ஈ) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும் பணிகளை நிறைவேற்றுகையிலும் அதிகார சபையினால் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகள்.

(3) நிதியத்திலிருந்து இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளைப் பிரயோகிக்கையில், புரிகையில் அத்துடன் நிறைவேற்றுகையில் அதிகார சபையினால் உறப்படும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளும் அத்துடன் இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.

கடன் வாங்கும் தத்துவங்கள்.

16. (1) அதிகாரசபை, அமைச்சரினதும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினதும் ஒருப்பாட்டுடன் அல்லது அதே போன்ற ஒருப்பாட்டுடன் வழங்கப்படும் ஏதேனும் பொதுவான அதிகாரத்தின் நியதிகளுக்கிணங்க, வரைவு என்ற வகையில் அல்லது வேறு வகையில், கடன் பெறலாம் அல்லது அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அதிகாரசபை தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைக் கடனாகப் பேசிப் பெறலாம் :

ஆயின், இவ்வுட்பிரிவின்கீழ் அதிகார சபையினால் திரட்டப்படும் கடன்கள் தொடர்பாக வெளி நிலுவையாகவுள்ள தொகைகளின் கூட்டுமொத்தமானது, எந்நேரத்திலும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை விஞ்சுதலாகாது.

(2) அதிகார சபையானது, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கொடுக்கப்பட்ட அமைச்சரின் சம்மதத்துடன், (1) ஆம் உட்பிரிவின் கீழான கடன் என்ற வகையாகவன்றி வேறு வகையாகப் பின்வரும் எல்லா நோக்கங்களுக்காகவும் அல்லது அவற்றுள் எதற்காகவும் பணத்தைக் கடனாகப் பெறலாம் :—

(அ) அதிகார சபையின் பயன்பாட்டுக்கெனத் தேவைப்படுத்தப்படும் எந்தவும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைத் தேவைப்படுத்தல் அல்லது கொள்ளுதல்,

(ஆ) முதலாம் உட்பிரிவின்கீழ் கடனாகப் பெறப்பட்ட ஏதேனும் பணத்தை மீள்கொடுப்பனவு செய்தல்.

நிதி ஆண்டும் அதிகாரசபையின் கணக்குகளும் கணக்காய்வு செய்தலும்.

17. (1) அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, அதன் வருமானம், அத்துடன் செலவினம், சொத்துக்கள் அத்துடன் பொறுப்புக்கள், அத்துடன் அதிகார சபையின் வேறு எல்லா நிதிசார் வகைகளையும் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் அதிகாரசபையின் கணக்குகளின் கணக்காய்வுகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் VI

### பொது

18. நிறுவனத்தின் ஒவ்வொரு பணிப்பாளரும், நிறுவனத்தில் எல்லா அலுவலர்களும், ஆணையாளர் தலைமையதிபதி, ஆணையாளர் ஒவ்வொருவரும், மாவட்ட ஆணையாளர், பிரதி ஆணையாளர் அத்துடன் உதவி ஆணையாளர் என்போர் தமது கடமைகளில் ஈடுபடுமுன்பு, அதிகாரசபையின் செயற்பாட்டுடன் தொடர்பான எல்லாக் கருமங்கள் குறித்தும் கண்டிப்பான இரகசியத்தை அனுசரிப்பதாகத் தாமே உறுதி கூறுவதாக வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளிப்படுத்துகையொன்றின் வாயிலாக, தமது பணிகளை, பின்வருவன தவிர்ந்த அவரது அறிவுக்குத் தெரியக் கூடிய எவையேனும் கருமங்களைத் தாம் வெளிவிடக் கூடாது எனத் தம்மளவில் உறுதி கூறுதல் வேண்டும் — இரகசியம் வெளிப்படுத்துகை.

(அ) சட்டமன்று ஒன்றினால் தேவைப்படுத்தப்படும்போது ;

அல்லது

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எதனுடனும் இணங்கியொழுகும் பொருட்டு.

19. (1) இச்சட்டத்தின் கீழான அதன் தத்துவங்கள், பணிகள் என்பனவற்றுள் எதனையும் அதிகாரசபை பிரயோகிப்பதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு இயலச் செய்யும் நோக்கத்துக்காக, அதிகாரசபை அல்லது அதன் சார்பில் அதிகாரசபையினால் அதிகாரமளிக்கப்பட்டவரான எவரேனும் ஆள், எழுத்திலான அறிவித்தல் மூலம், அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விபரத்திரட்டுகளையும் தகவல்களையும் அதிகாரசபைக்கு அல்லது அதிகாரசபையினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்குக் கொடுக்குமாறும்படி தேவைப்படுத்தலாம்; அல்லது அதிகாரசபை முன்பு சமுகமளிக்குமபடி ஆளெவரையும் தேவைப்படுத்தலாம். விபரத்திரட்டுகளும் தகவல்களும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஓர் அறிவித்தல் மூலம், தேவைப்படுத்தப்பட்டவரான ஆளெவரும் ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய விபரத்திரட்டையும் அல்லது தகவல்களையும் கொடுத்துதவுவதிலிருந்து அத்தகைய ஆள் தவிர்க்கப்படுமிடத்துத் தவிர, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளாக, அத்தகைய அறிவித்தலிலான தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்காக ஏதேனும் விபரத்திரட்டை அல்லது தகவலைக் கொடுத்துதவுதல் அல்லது அதிகாரசபை முன்பு சமுகமளித்தல் அவரது கடமையாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் அறிவித்தலொன்றின் தேவைப்பாடுகளுக்கிணங்க, (1) ஆம் உட்பிரிவின்கீழ், கொடுத்துதவப்பட்ட விபரத்திரட்டொன்றில் அடங்கியுள்ள தகவல் எதுவும், அத்தகைய விபரத்திரட்டை அல்லது தகவலைக் கொடுத்துதவியவரான ஆளின் சம்மதத்துடன் அல்லது அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றுகையின்போது தவிர, வெளியிடப்படுதலோ அல்லது வேறு ஆளெவருக்கும் அறிவித்தலோ ஆகாது.

(4) அதிகாரசபையின் முன்னர் ஏதேனும் கூற்றினைச் செய்கின்றவரான ஆளொவ்வொருவரும், அக்கூற்றுத் தொடர்பில், ஒரு நீதிமன்றத்தின் முன்னர் சாவறுவாகின்றவரான சாட்சியொருவர், அத்தகைய நீதிமன்றத்தின் முன் அவரால் அளிக்கப்படும் சான்று தொடர்பாக எந்தச் சிறப்புரிமைகளுக்கு உரித்துடையவராகின்றாரோ அந்தச் சிறப்புரிமைகள் யாவற்றிற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

லொத்தரை நடாத்துதல்.

20. (1) அதிகார சபையானது, ஆண்டுதோறும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினவான லொத்தர்களை நடாத்துதல் வேண்டும்.

(2) லொத்தர் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்தில் அதிகார சபையினால் நடாத்தப்படுதல் வேண்டும்.

அதிகார சபையின் பணிப்பாளர்கள், அலுவலர்கள் அத்துடன் சேவையாளர்கள் என்போர் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

21. அதிகார சபையின் பணிப்பாளர்கள், அலுவலர்கள் சேவையாளர்கள் யாவரும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும் அத்துடன் அதன் நோக்கங்களுக்காகவும், பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

அதிகாரசபையானது இலஞ்ச சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல்.

22. அதிகாரசபையானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு, அச்சட்டத்தின் ஏற்பாடுகள், அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

குழுக்கள்.

23. அதிகாரசபை அதன் பணிகளை நிறைவேற்றுவதில் அதிகார சபைக்கு மதியுரை கூறும் அத்துடன் உதவிசெய்யும் நோக்கத்திற்காக அத்தகைய காலப்பகுதிக் குழுக்களைத் தாபிக்கலாம் என்பதுடன் அது அத்தகைய குழுக்களில் சேவையாற்றுவதற்கென அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய எவரேனும் ஆட்களையும் நியமிக்கலாம்.

இச்சட்டத்தின் கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின் மீது எடுக்கப்படும் நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

24. (1) (அ) இச்சட்டத்தின் கீழ் அதிகாரசபையால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் அல்லது செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்காக அதிகார சபைக்கு எதிராக ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ், அல்லது அதிகாரசபையின் பணிப்பின்மீது அதிகாரசபையின் எவரேனும் பணிப்பாளரினால், அலுவலரினால் அல்லது சேவை

யாளரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்கெதிராக, எவரேனும் பணிப்பாளருக்கு அல்லது அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கெதிராக;

வழக்குத் தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

25. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக்கம்பெனிகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவை எவ்வாறிருப்பினும், அச்சட்டத்தின் ஏற்பாடுகள், 5 ஆம் பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ், அதிகாரசபையினால் கொண்டுநடாத்தப்படும் வியாபாரத்திற்கு ஏற்புடைத்தாதலாகாது.

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக்கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகாமை. தவறுகள்.

26. (1) இச்சட்டத்தின்கீழ் எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட தவறுகள் ஏதேனும் வெளிப்படுத்துகையில் அவரது அறிவுக்கு எட்டியவரை பொய்யானதென அல்லது செம்மையற்றதெனத்தெரிந்துகொண்டு அவரது சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பாக அல்லது அவரின் வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் அல்லது தங்கிவாழுநர்கள் தொடர்பாக ஏதேனும் கூற்றைச் செய்கின்ற எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(2) இந்நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் நன்மைபெறுகின்ற ஆளொருவராக இருந்துகொண்டு—

(அ) அவரது சொத்துக்களும் பொறுப்புக்களும் தொடர்பாக; அல்லது

(ஆ) அவரது வாழ்க்கைத் துணையின், பிள்ளைகளின் அல்லது வேறு தங்கிவாழுநர்களின் சொத்துக்களும் பொறுப்புக்களும் தொடர்பாக,

இச்சட்டத்தின்கீழ் அவரால் செய்யப்பட்ட ஒரு வெளிப்படுத்துகையில் அவரால் கொடுத்துதவப்பட்ட விபரங்களில் ஏற்பட்ட ஏதேனும் மூலகிய மாற்றம் பற்றி, அத்தகைய மாற்றம் ஏற்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாதகாலப் பகுதிக்குள்ளாக நியாயமான காரணமின்றி அதிகாரிக்கு அல்லது ஆணையாளர் தலைமையதிபதிக்கு எவரேனும் ஆள் அறிவிக்கத் தவறினால், அவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விசாரணையின்பின் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு, ஒரு வருடத்திற்கு மேற்படாத காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

(3) (அ) பத்தொன்பதாம் பிரிவின்கீழ் அவருக்கு அனுப்பப்பெற்ற அறிவித்தலொன்றின் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ;

(ஆ) அத்தகைய எதேனும் அறிவித்தலின் தேவைப்பாடொன்றுடன் இணங்கியொழுகுவதில், எதேனும் பிழையான அல்லது சரியற்ற விபரத்திட்டை அல்லது தகவலை அறிந்துகொண்டே கொடுக்குதவுகின்ற,

ஆள் எவரும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

(4) (அ) அதிகாரசபையின் எவரேனும் அலுவலரை, இச்சட்டத்தின்கீழ் அவரது பணிகளைப் புரிவதிலிருந்தும் தடுக்கின்ற அல்லது தடைசெய்கின்ற, அதில் தலையிடுகின்ற அல்லது தலையிட எத்தனிக்கின்ற அல்லது வயப்படுத்துகின்ற ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் பிழையான வெளிப்படுத்துகையொன்றைச் செய்யுமாறு தூண்டுகின்ற அல்லது தூண்டுவதற்கு எத்தனிக்கின்ற,

ஆள் எவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதி ஒன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) (அ) பதினெட்டாம் பிரிவின்கீழ் இரகசியம் பற்றிய சத்தியப்பிரமாணம் ஒன்றை எடுக்குமாறு தேவைப்படுத்தப்பட்ட ஆள் ஒருவராக இருந்து, அத்தகைய சத்தியப்பிரமாணத்தை எடுக்காமல் இச்சட்டத்தின்கீழ் செயலாற்றுகின்ற ; அல்லது

(ஆ) பதினெட்டாம் பிரிவின் அல்லது அப்பிரிவின்கீழ் எடுக்கப்பட்ட சத்தியப்பிரமாணமொன்றின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றுகின்ற,

எவரேனும் பணிப்பாளர், ஆணையாளர் தலைமையதிபதி, எவரேனும் ஆணையாளர், மாவட்ட ஆணையாளர், பிரதி ஆணையாளர், உதவி ஆணையாளர் அல்லது அதிகாரசபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(6) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி எதனையும் மீறுகின்ற ஆள் எவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

27. (1) பின்வரும் கருமங்கள் எல்லாம் அல்லது அவற்றுள் ஏதேனும் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :— ஒழுங்குவிதிகள்.

(அ) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கருமங்கள் ;

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நன்மைபெறுபவரொருவராக இருப்பதற்கான தகவுடைமைக்கான நிபந்தனைகள் ;

(இ) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நன்மைபெறுபவரொருவராக இருப்பதற்கான விண்ணப்பங்கள் செய்யப்படவேண்டிய முறை ;

(ஈ) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிவாரணம் பெறுவதற்கு அத்தகைய நன்மை பெறுபவர்களினால் இணங்கியொழுகப்படவேண்டிய நிபந்தனைகளும் எந்த விதத்திலும் வகையிலும் நிவாரணமானது நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் அத்தகைய நன்மை பெறுபவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும் என்பதும் ;

(உ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வழங்கப்படவேண்டுமென அல்லது ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட எல்லா அறிவித்தல்களினதும் வெளிப்படுத்துகைகளினதும் வகை ;

(ஊ) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நன்மை பெறுபவர்களாக காலத்திற்குக்காலம் வெளிப்படுத்தப்பட்ட ஆட்களின் பிரவின் வெளியீடு.

(2) ஈராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் திகதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஈராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் அது வெளியிடப்பட்டதன் பின்னர் உசிதமானளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின்முன் கொணரப்படல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்கு விதியானது அங்கீகரிக்கப்படாத திகதியிலிருந்து ஆனால் அதன்கீழ் ஏலவே செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படல் வேண்டும். ஒழுங்குவிதி ஒன்றானது எத்திகதியன்று இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ, அத்திகதி பற்றிய அறிவிப்பு, கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படின் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

28. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள்கோடல்.

29. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி—

"உள்ளூர் அதிகாரசபை" என்பது ஒரு மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேச சபை எனப் பொருள்படும் என்பதுடன் ஏதேனும் அத்தகைய சபையினால் அல்லது சபை (சபா)யினால் பிரயோகிக்கப்பட்ட, புரியப்பட்ட அத்துடன் நிறைவேற்றப்பட்ட தத்துவங்களுக்கு, கடமைகளுக்கு அத்துடன் பணிகளுக்கு நேரொத்த அல்லது அதனையொத்த தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அத்துடன் நிறைவேற்றுவதற்கு ஏதேனும் சட்டத்தினால் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும்;

"மாகாண சபை" என்பது அரசியலமைப்பின் XVIIஅ என்னும் அத்தியாயத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு மாகாண சபை என்று பொருள்படும்.

"இளைஞர்" என்பது முப்பத்தைந்து வயதுக்குக் கீழ்ப்பட்ட எவரேனும் ஆள் எனப் பொருளாகும்.

அட்டவணை (பிரிவு 8 (3))

அதிகார சபையின் பணிப்பாளர்கள் தொடர்பான ஏற்பாடுகள்.

1. பின்வரும் சந்தர்ப்பங்களில் ஓர் ஆள் பணிப்பாளராக நியமிக்கப்படுவதற்கு அல்லது பணிப்பாளராகத் தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும் :—

(அ) அவர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக, அல்லது ஒரு மாகாண சபையின் உறுப்பினர் ஒருவராக அல்லது ஓர் உள்ளூரதிகார சபையின் உறுப்பினர் ஒருவராக இருந்தால் ; அல்லது

(ஆ) இலங்கையில் அல்லது ஏதேனும் பிறநாட்டில் வலுவிலிருக்கும் ஏதேனும் சட்டத்தின் கீழ் சித்தசுவாதீனமற்றவர் எனக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால் ; அல்லது

(இ) இலங்கையில் அல்லது ஏதேனும் வேறு நாட்டில் ஏதேனும் சட்டத்தின் கீழ் கடனிறுக்க வகையற்றவரென அல்லது வங்குரோத்தானவரென வெளிப்படுத்தப்பட்டு, விடுவிக்கப்படாத, கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்கி முறிந்தவராக இருந்தால் ; அல்லது

(ஈ) இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் (ஓர் ஒத்திவைக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பு உள்ளடங்கலாக) மரியத் தண்டனைத் தீர்ப்பு விதிக்கப்பட்டிருக்கும் ஓர் ஆளாக இருந்தால் ; அல்லது

(உ) ஒரு பணிப்பாளராக அவரது பணிகள் அவரால் நிறைவேற்றப்படுவதனை பங்கமாகப் பாதிக்கும் சாத்தியம் கொண்ட ஏதேனும் அது போன்ற நிதிசார்ந்த அல்லது வேறு அக்கறை கொண்டிருந்தால்.

2. நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர், அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம்.

3. அமைச்சரானவர், அதற்கான காரணமெதனையும் குறிப்பிடாமல் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவரை பதவியிலிருந்து அகற்றலாம் ; அத்துடன் அத்தகைய அகற்றுகை பற்றி ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாய சபையில் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

4. (1) நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒவ்வொருவரும் இறப்பினால், பதவி துறத்தலால் அல்லது பதவியினின்று அகற்றப்படுவதால், பதவியை முன்னமேயே வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் திகதியிலிருந்து மூன்றுவருட காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும் அத்துடன் பதவியிலிருந்து அவர் அகற்றப்பட்டிராவிடின் மீள நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையவராதலும் வேண்டும்.

ஆயின், இறப்பினால், பதவி துறத்தலினால் அல்லது வேறுவகையில் பதவியினின்று அகற்றப்படுவதால், பதவியை வறிதாக்கிய ஒரு பணிப்பாளரின் இடத்திற்கு ஒரு பணிப்பாளர், அவர் எந்தப் பணிப்பாளரைப் பின்னுறுகின்றாரோ அந்தப் பணிப்பாளரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது எவரேனும் நியமிக்கப்பட்ட பணிப்பாளர், சுகயீனம், இயலாமை, இலங்கையில் இல்லாமை என்பன காரணமாக தமது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக முடியாதிருந்தால், அமைச்சரானவர் விடயத்திற்கேற்ப பணிப்பாளர் தலைமையதிபதியாகச் செயலாற்றுவதற்கென வேறு எவரேனும் பணிப்பாளரை நியமிக்கலாம், அல்லது அத்தகைய நியமிக்கப்பட்ட பணிப்பாளரின் இடத்தில் செயலாற்றுவதற்கென வேறு எவரேனும் ஆளை நியமிக்கலாம்.

5. பணிப்பாளர் தலைமையதிபதிக்கும் பணிப்பாளர்களுக்கும் அமைச்சரால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியம் நிதிகளிலிருந்து, செலுத்தப்படுதல் வேண்டும்.

6. அதிகார சபையினால் செய்யப்பட உத்தேசிக்கப்பட்டிருக்கும் ஒப்பந்தம் எதிலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவகையிலும் அக்கறை கொண்டுள்ள பணிப்பாளர் ஒருவர் அதிகாரசபையின் கூட்டமொன்றில் அத்தகைய அக்கறையின் தன்மை பற்றி வெளிப்படுத்தல் வேண்டும். இந்த வெளிப்படுத்துகை அதிகாரசபையின் கூட்டங்களின் கூட்டக்குறிப்புகளில் பதியப்படுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய பணிப்பாளர் அத்தகைய ஒப்பந்தம் தொடர்பில் அதிகார சபையின் ஏதேனும் தீர்மானத்தில் அல்லது முடிவில் பங்குபற்றுதலும் ஆகாது : ஆயினும், எவரேனும் பணிப்பாளர் அரசாங்கத் திணைக்களத்தில், அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தில் அலுவலர் ஒருவராக அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் பணிப்பாளர் ஒருவராக இருப்பதன் பயனைக்கொண்டு எந்த ஒப்பந்தம் ஒன்றில் அக்கறை கொண்டுள்ளாரோ அந்த அக்கறையானது, இப்பந்தியின் கருத்தெல்லைக்குள் அக்கறை ஒன்றாகக் கருதப்படுதலாகாது.

7. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, அமைச்சருக்கு முகவரியிடப்பட்டு அப்பயன்பட எழுதப்பட்ட கடிதமூலம், தமது பதவியைத் துறக்கலாம்.

(2) அமைச்சரானவர், அதற்கான காரணமெதனையும் குறிப்பிடாமல், எந்நேரத்திலும் பணிப்பாளர் தலைமையதிபதிப் பதவியிலிருந்து பணிப்பாளர் தலைமை அதிபதியை அகற்றலாம்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவிக்காலம், அதிகார சபையின் அவரது உறுப்பாண்மைக் காலமாதல் வேண்டும்.

8. பணிப்பாளர் தலைமையதிபதி அதிகார சபையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமைதாங்குதல் வேண்டும். அதிகார சபையின் ஏதேனும் கூட்டத்திற்கு வருகைதாராதிருந்தால் பதவி வழி பணிப்பாளர் ஒருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்க வேண்டும்.

9. (1) இப்பந்தியின் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமைவாக, அதிகார சபையானது, அதன் கூட்டங்கள், அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் என்பன தொடர்பிலான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(2) அதிகார சபையின் ஒரு கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் நாலு பணிப்பாளர்களாதல் வேண்டும்.

10. அதிகார சபையின் செயல், முடிவு அல்லது நடவடிக்கை எதனையும், அதிகாரசபையிலுள்ள வெற்றிடமொன்று இருப்பதினால், அல்லது அதன் பணிப்பாளர் எவரினதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதனால் மாத்திரம் செல்லுபடியற்றதாக்கலாகாது.

11. (1) அதிகார சபையின் இலச்சினையானது காலத்திற்குக்காலம் அதிகார சபையினால் முடிவுசெய்யக்கூடிய அத்தகைய ஆட்களின் கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும்.

(2) அதிகார சபையின் இலச்சினையானது, அதிகார சபையினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) அதிகார சபையின் இலச்சினையானது, இரு பணிப்பாளர்களின் முன்னிலையில் தவிர ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது. இருவரும் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) அதிகார சபை, இலச்சினை எச்சாதனங்களில் அல்லது ஆவணங்களில் பொறிக்கப்பட்டனவோ அத்தகைய சாதனங்கள், ஆவணங்கள் என்பவற்றின் பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டும்.

12. மூன்றாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பிடு செய்யப்பட்ட ஒரு பணிப்பாளர், சிரேட்ட உதவிச் செயலாளர் தரத்திற்குக் குறையாத அவரது அமைச்சிலுள்ள ஒரு சிரேட்ட அலுவலரை, அவரது இடத்தில் அதிகார சபையில் கூட்டங்களில் சமுகமளிப்பதற்கும் அவருக்கு மாற்றாகவும் பதவிப் பெயர்குறித்து நியமிக்கலாம். அத்துடன் அத்தகைய பதவிப் பெயர் குறித்து செய்யப்பட்ட நியமனம் பற்றி எழுத்தில் அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

13. பன்னிரண்டாம் பந்தியின்கீழ் பதவிப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒரு மாற்றுப் பணிப்பாளர், அதிகார சபையின் கூட்டங்களுக்கு வருகை தருவதற்கும் அதில் வாக்களிப்பதற்கும் உரித்துடையவராதல் வேண்டும். ஆனால் அதிகார சபையின் கூட்டங்களில் தலைமைதாங்குவதற்கென 8 ஆம் பந்தியின் கீழ் தெரிவுசெய்யப்படுவதற்கு தகுதியற்றவராதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387' (வெளிநாட்டு) ரூபா 1,949' ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல, 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட் கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.